# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC.99/2026 | Date | : 16.06.2026 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : திரு.மணிகண்டன் | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.06.2026.
(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சங்ககிரி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.03.2026 ம் தேதி, மாலை சுமார் 04.00 மணிக்கு, காவல் உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார் என்பவருடன், நானும் மற்றும் தலைமை காவலர் திரு.அழகுராஜா, ஆகியோர்களுடன் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு ரோந்து அலுவலாக, சங்ககிரி காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, மோரூர் பால்மடை பகுதியில் கண்காணித்துக்கொண்டு சென்றபோது, அங்கு கையில் ஒரு சாக்கு பையுடன் சந்தேகபடும் படியாக இருந்த ஒரு நபர் போலிசாராகிய எங்களை பார்த்ததும் ஓட முற்பட்டவரை பிடித்து விசாரித்தபோது, பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து அவர் தனது பெயர் தன்ராஜ், த/பெ.குப்புசாமி, ராஜபாளையம், கோழிக்கால்நத்தம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம் என்று கூறியவரை, மேலும் விசாரிக்க அவர் அரசு அனுமதியின்றி சுயலாபத்திற்காக கள்ளத்தனமாக அரசு மதுபானத்தை வாங்கி வந்து விற்பனை செய்ய

வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி மாலை சுமார் 04.10 மணிக்கு கைது செய்தும், அவர் சாக்கு பையில் மறைத்து வைத்திருந்த 180 ML அளவு கொண்ட BLACK PEARL BRANDY- 07 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியபோது பொதுஜன சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் உடனிருந்த எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார்.

2) மேற்படி கைப்பற்றுதல் மகசரில் நானும், தலைமை காவலர் திரு.அழகுராஜா, என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3) பின்னர் கைப்பற்றிய வழக்கு சொத்தை தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு 32-ன் படி சம்பவ இடத்திலேயே அழித்தல் மகஜர் மூலம் அழிக்கப்பட்டது. மேற்படி அழித்தல் மகசரில் நானும், தலைமை காவலர் திரு.அழகுராஜா, என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகசரிலுள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**அழித்தல் மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4) பின்னர், கைது செய்த எதிரியை மாலை சுமார் 04.45 மணிக்கு நிலையம் அழைத்து வந்து எதிரியின் மீது சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.111/2026, சட்டப்பிரிவு 4(1)(C) of TNP(A) ACT -ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரனை செய்தார்.

**குறுக்கு விசாரணை -**

1) மதுபாட்டில் விற்பனை செய்வதாக எங்களுக்கு தகவல் கிடைத்ததா என்றால் இல்லை. எந்தெந்த வழியாக ரோந்து சென்றோம் என்றால் மோரூர் பால்மடை வழியாக சென்றோம். யார் யார் எந்தெந்த வாகனத்தில் சென்றோம் என்றால் நானும், தலைமை காவலர் திரு.அழகுராஜா ஒரு இருசக்கர வாகனத்திலும், காவல் உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார் ஒரு இருசக்கர வாகனத்திலும் சென்றோம்.

2) எதிரி கையில் என்ன கலர் பை வைத்திருந்தார் என்றால் வெள்ளை நிற சாக்கு பை வைத்திருந்தார். அதனை கைப்பற்றினோமா என்றால் காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். நாங்கள் ரோந்து சென்றபோது வழியில் எதிரியை தவிர வேறு யாரையாவது தணிக்கை செய்தோமா என்றால் இல்லை. எதிரி அவர் வைத்திருந்த மதுபானத்தை யாரிடமாவது விற்றதாக விசாரித்து வாக்குமூலம் பெற்றோமா என்றால் இல்லை. எதிரி மதுபானங்களை விற்ற பணத்தை அவரிடம் இருந்து கைப்பற்றினோமா என்றால் இல்லை.

3) நான் சம்பவ இடமே செல்லவில்லை என்றும், எதிரியிடம் இருந்து மதுபானங்களை கைப்பற்றவில்லை என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக எதிரிமீது பொய் புகார் பெற்று அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,<br>Judicial Magistrate No.1,<br>Sankari.

Sd/-Manikandan

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | :CC No.99/2026 | Date | : 16.06.2026 |
| Deposition of Witness for | :அ.சா.2 | Taluk | : |
| Name | :திரு.செல்வராசு | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.06.2026.
(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார், அவர்கள் பணிமாறுதலில் சென்றுவிட்டதால் அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு பரீட்சையம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 15.03.2026 ம் தேதி, மாலை சுமார் 04.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார், அவர்களுடன், தலைமை காவலர் திரு.அழகுராஜா மற்றும் முதல்நிலை காவலர் திரு.மணிகண்டன் ஆகியோர்களுடன் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு ரோந்து அலுவலாக, சங்ககிரி காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, மோரூர் பால்மடை பகுதியில் கண்காணித்துக்கொண்டு சென்றபோது, அங்கு கையில் ஒரு சாக்கு பையுடன் சந்தேகபடும் படியாக இருந்த ஒரு நபர் போலிசாராகிய எங்களை பார்த்ததும் ஓட முற்பட்டவரை பிடித்து விசாரித்தபோது, பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து

அவர் தனது பெயர் தன்ராஜ், த/பெ.குப்புசாமி, ராஜபாளையம், கோழிக்கால்நத்தம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம் என்று கூறியவரை, மேலும் விசாரிக்க அவர் அரசு அனுமதியின்றி சுயலாபத்திற்காக கள்ளத்தனமாக அரசு மதுபானத்தை வாங்கி வந்து விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி மாலை சுமார் 04.10 மணிக்கு கைது செய்தும், அவர் சாக்கு பையில் மறைத்து வைத்திருந்த 180 ML அளவு கொண்ட BLACK PEARL BRANDY- 07 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியபோது பொதுஜன சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் உடனிருந்த தலைமை காவலர் திரு.அழகுராஜா மற்றும் முதல்நிலை காவலர் திரு.மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார்.

2) மேற்படி கைப்பற்றுதல் மகசரில் தலைமை காவலர் திரு.அழகுராஜா மற்றும் முதல்நிலை காவலர் திரு.மணிகண்டன் ஆகியோர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார். (**கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3) பின்னர், கைப்பற்றிய வழக்கு சொத்தை தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு 32-ன் படி சம்பவ இடத்திலேயே அழித்தல் மகஜர் மூலம் அழிக்கப்பட்டது. மேற்படி அழித்தல் மகசரில் தலைமை காவலர் திரு.அழகுராஜா மற்றும் முதல்நிலை காவலர் திரு.மணிகண்டன் ஆகியோர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார். (**அழித்தல் மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4) பின்னர் கைது செய்த எதிரியை மாலை சுமார் 04.45 மணிக்கு நிலையம் அழைத்து வந்து எதிரியின் மீது சங்ககிரி காவல் நிலைய குற்ற எண் .111/2026, சட்டப்பிரிவு 4(1)(C) of TNP(A) ACT-ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). பின்னர், எதிரியின் மீது சட்டப்பிரிவு 4(1)(C) of TNP(A) ACT -ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

<u>குறுக்கு விசாரணை</u> -

1) எந்தெந்த வழியாக ரோந்து செல்லப்பட்டது என்றால் மோரூர் பால்மடை வழியாக சென்றுள்ளார்கள். யார் யார் எந்தெந்த வாகனத்தில் சென்றுள்ளார்கள் என்றால் தலைமை காவலர்கள் திரு.மணிகண்டன் மற்றும் திரு.அழகுராஜா ஒரு இருசக்கர வாகனத்திலும், காவல் உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார் ஒரு இருசக்கர வாகனத்திலும் சென்றுள்ளார்கள்.

2) எதிரி கையில் என்ன கலர் பை வைத்திருந்தார் என்றால் வெள்ளை நிற சாக்கு பை வைத்திருந்தார். அதனை கைப்பற்றியுள்ளார்களா என்றால் காவல் உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார் கைப்பற்றினார். ரோந்து சென்றபோது வழியில் எதிரியை தவிர வேறு யாரையாவது தணிக்கை செய்யப்பட்டதா என்றால் இல்லை. எதிரி அவர் வைத்திருந்த மதுபானத்தை யாரிடமாவது விற்றதாக விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டதா என்றால் இல்லை. எதிரி மதுபானங்களை விற்ற பணத்தை அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை.

3) சம்பவ இடமே செல்லவில்லை என்றும், எதிரியிடம் இருந்து மதுபானங்களை கைப்பற்றவில்லை என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக எதிரிமீது பொய் புகார் பதிவு செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,

Sd/-Selvarasu

Judicial Magistrate No.1,

Sankari.